# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2244/9 - 2021 සැප්තැම්බර් මස 07 වැනි අඟහරුවාදා - 2021.09.07

2244/9 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 6/3/7/22.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2014/PC/342.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மமா/மா/நா/மேல்பிட்டிய மகா வித்தியாலயத்திற்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், நாவுல பிரதேச செயலாளர் பிரிவில், வகபனஹ உடசிய பத்துவ சிறுபிரிவில் மேல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 2021.03.05 ஆந் திகதிய கடைசி கிராம வரைபட இலக்கம் 264, குறைநிரப்பி இல. 14, பத்திர இலக்கம் 12 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

1. **துண்டு இல. 1189**

காணியின் பெயர்: கல்பொடவத்தே ஹேன; விபரம்: விளையாட்டு மைதானம்; உரிமை கோருனர்: மேல்பிட்டிய, மாத்தளை இல் வதியும் திஸாநாயக்க முதியன்சேலாகே கொலொன்கொல்லே கெதர ரிக்கிரி பண்டா (காலஞ்சென்ற) மற்றும் மேல்பிட்டிய, மாத்தளை இல் வதியும் திஸாநாயக்க முதியன்சேலாகே கொலொன்கொல்லே கெதர ஹீன் பண்டா; விஸ்தீரணம்: 0.2430 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு நாவுல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிந்தக இலங்கசிங்க,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2021, ஓகத்து 17.